*அரசாங்க நிருவாக சுற்றறிக்கை : 19/2017(II)*

எனது இல : PL/7/3/டெங்கு/சுற்றறிக்கை
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்
மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2023.06.26

*அமைச்சுகளின் செயலாளர்கள்*
*மாகாண பிரதம செயலாளர்கள்*
*திணைக்களத் தலைவர்கள்*
*அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள்*

**டெங்கு நோயைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்காக “ நிறுவன ரீதியான டெங்கு ஒழிப்பு தினத்தினைப்” பிரகடனப்படுத்துதல்**

*டெங்கு நோயைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்ற தலைப்பிலான சனாதிபதியின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள இலக்கம் PS/EAD/Circular/06/2023 மற்றும் 2023/04/20 ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு மேலதிகமானது.*

02. *வேகமாகப் பரவிவரும் டெங்கு தொற்று நிலைமையானது தற்போது சமூகம் எதிர்நோக்கும் பிரதான சுகாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளதுடன் சுகாதாரத் துறை சார்ந்த தகவல்களின்படி மேல் மாகாணமானது அதிக ஆபத்துள்ள பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ளது. அத்துடன், நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் வேகமாக டெங்கு நோய் பரவும் அபாயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், கட்டட வளாகங்கள், பாடசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள், மீன்பிடித் தளங்கள், வீடுகள் மற்றும் பொது இடங்களில் நுளம்புகள் அதிகம் பெருகும் அபாயம் காணப்படும் இடங்களாக தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன.*

03. *இதன் பின்னணியில், டெங்கு நுளம்பு பரவுவதைத் தடுப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் தேசிய, மாகாண, மாவட்ட, கிராமிய மற்றும் வீட்டு மட்டங்களில் அனைத்துத் தரப்பினரினரினதும் ஆக்கபூர்வமான பங்களிப்புடன் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் அவசியம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில், அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதன் முக்கியத்துவம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது. அந்தக் கலந்துரையாடலில், வெள்ளிக்கிழமையை "நிறுவன ரீதியான டெங்கு ஒழிப்பு தினமாக" பிரகடனப்படுத்துவதற்கும், அதற்கான விசேடமான நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துவதற்கும் முடிவு செய்யப்பட்டது.*

04. *அதன்படி, அனைத்து அரச நிறுவனங்களின் வளாகங்களிலும் டெங்கு நுளம்புகள் பரவுவதைக் கட்டுப்படுத்த பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிறுவனங்களின் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.*

i. *வாரத்தின் வெள்ளிக் கிழமைகளில் காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை ஒரு மணி நேரம் நுளம்பின் குடம்பிகள் பெருகும் இடங்களைக் கண்டறிந்து அனைத்து ஊழியர்களின் பங்களிப்போடு துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன்,*

இந்நிகழ்ச்சித்திட்டத்தை இயன்றவரை சுகாதாரத் துறையினருடன் இணைந்து மேற்கொள்ளுதல்.

ii. டெங்கு நுளம்புகள் அல்லது தொற்று நோய் நிலைமைகள் குறித்து தொடர்ச்சியான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு நிறுவன வளாகத்திற்குள் ஏற்பாடுகள் செய்யப்படுவதை நிறுவனங்களின் தலைவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

iii. ஒவ்வொரு அரசு நிறுவனங்களிலும் (மருத்துவமனைகள், பாடசாலைகள், அலுவலகங்கள்) டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்ய ஒரு குழுவை நியமித்து, அவர்களின் மேற்பார்வையின் கீழ் இந்த நடவடிக்கைகள் முறையாக செய்யப்படல் வேண்டும் என்பதுடன், டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறைந்தபட்சம் வாரந்தோறும் மேற்கொள்ளப்படல் வேண்டும். உரிய அறிவுறுத்தல்கள் பிராந்திய சுகாதார வைத்திய அலுவலரால் வழங்கப்படும் என்பதுடன், அதன் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கை ஒன்றை மாதந்தோறும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிக்கு கையளிக்க ஏற்பாடு செய்க.

05. டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் போன்றே அதன் மேற்பார்வையும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படல் வேண்டும் என்பதால், அனைத்து அரச நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் போன்றோர் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

i. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் நிகழ்ச்சி நிரல்களில் டெங்கு தொற்றுநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான திட்டங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடப்படல் வேண்டும் என்பதுடன் பிரதேச ரீதியாக செயல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பணிகள் உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழுக்களின் வழிகாட்டல்களுடன் உரிய பகுதிகளின் மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தொடர்ச்சியான பங்களிப்பின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட வேண்டும்.

ii. டெங்கு அதிகம் பரவக்கூடிய பகுதிகளாகக் கருதக்கூடிய கட்டுமானத் தளங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் உள்ளிட்ட பொது இடங்கள் மற்றும் சுகாதாரத் துறையால் டெங்கு அபாயப் பகுதிகளாக பெயரிடப்பட்ட வேறு ஏதேனுமொரு இடம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மற்றும் மாகாண சுகாதார அமைச்சினால் வழங்கப்படக்கூடிய வழிகாட்டல்களின் பிரகாரம், இந்த இடங்களில் டெங்கு பரவுவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக அமுல்படுத்தப்படல் வேண்டும்.

iii. டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில், கட்டுமான ஒப்பந்தங்களில் கட்டுமான வளாகங்களுக்கான விதிகள் மற்றும் சுகாதார வழிகாட்டுதல்களைச் சேர்ப்பதுடன், வெற்று நிலங்கள், குடியிருப்பு அல்லாத சொத்துக்கள் மற்றும் மீன்பிடி துறைமுகங்களுக்கு அருகில் பயன்படுத்தப்படாத/கைவிடப்பட்ட அல்லது உரிமையாளர் இல்லாத படகுகள் போன்றவற்றில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாவதைத் தடுக்கத் தேவையான சட்ட விதிகளை அமலபடுத்த வேண்டும். மேலும், ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் அதன் அதிகார எல்லைக்குள் இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

iv. டெங்கு நோய்த் தொற்று அபாயம் குறித்து தேசிய, மாகாண அல்லது மாவட்ட சுகாதாரப் பிரிவுகளை அறிவுறுத்தும் சந்தர்ப்பங்களில், உரிய தரப்பினரின் ஆக்கபூர்வமான பங்களிப்புக்களை சுகாதாரத் துறைக்கு வழங்குதல் முன்னுரிமைப் பணியாகக் கருதப்பட

வேண்டும். மேலும், நிறுவனங்களின் தலைவர்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் டெங்கு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

06. மேற்கூறிய நடைமுறைகளின்படி, டெங்கு தொற்றுநோய் நிலைமையை அகற்றுவதற்கு உங்களின் தனிப்பட்ட மேற்பார்வையின் கீழ் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் சுகாதாரத்திற்கு உகந்த வகையில் அனைத்து நிறுவன வளாகங்களையும் பராமரிக்க நீங்கள் வழங்கக்கூடிய ஒத்துழைப்பினை மிகவும் மேலானதாகக் கருதுகின்றேன்.

ஒப்பம்./ கே.டி.என். ரஞ்சித் அசோகா
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 011 2302722
தொலைநகல் எண் : 011 2302722
மின்னஞ்சல் முகவரி : addsec.pclg@pclg.gov.lk

பிரதிகள்:
01. ஜனாதிபதியின் செயலாளர் (ஜனாதிபதி செயலகம்) –தங்களது இல PS/EAD/சுற்றறிக்கை/06/2023 மற்றும் 2023.04.20 ஆம் தேதியிட்ட சுற்றறிக்கை – த.செ.அ.கொ.

02. செயலாளர், சுகாதார அமைச்சு - தங்களது இல: NDCU/AF/OBR/MIS/94/2022 மற்றும் 2023.06.06 தேதியிடப்பட்ட கடிதத்தின்படி- த.செ.அ.கொ.